பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் பேச்சை முடித்துவிடுங்கள் கண்ணன்.

திரு. ஏ.எஸ். கண்ணன்: 527 கோடி ரூபாய்க்குத்தான் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால் மூலிகை வளர்வதில்-பணத்தில்-உலகத்தில் இரண்டாவது இடத்தைத்தான் நாம், இந்தியா பெற்றிருக்கிறோம். உலக விற்பனையில் ஏழாவது இடத்தைத்தான் நாம் பெற்றிருக்கிறோம். மூலிகை சக்தியைப் பிரித்தெடுக்கத் தேவையான நவீன தொழில்நுட்பம் சித்தா, ஆயுர்வேத பட்டதாரிகள், ஆராய்ச்சியாளர்கள், திறமை வாய்ந்த தொழிலாளர்கள், குறு, சிறு விவசாயிகள்--தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தேவையான நிலமும் நமக்கு நிச்சயமாக இருக்கிறது—மேற்காணும் தகவலை ஆய்வுத் தொகுப்பாக வெளியிட்டுள்ளவர்கள், இந்திய அரசின் ஏற்றுமதி, இறக்குமதி வங்கி 'எக்சிம்' என்ற பொதுத் துறை வங்கிதான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கண்ணன், மற்ற கருத்துகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள், இத்துடன் பேச்சை நிறைவு செய்யுங்கள்.

திரு. ஏ.எஸ். கண்ணன்: வெளியிட்டிருக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, என்னுடைய தொகுதிப் பிரச்சினை, கடந்த ஆண்டு–

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதிப் பிரச்சினைகளை எழுதிக் கொடுத்துவிடலாம்.

8. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 6-5-2003 ஆம் நாளன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 6-5-2003 அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

2003 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

6-5-2003 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை, செவ்வாய்க்கிழமை (6-5-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

87. 2002 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிக் கட்டடம் (நீர் பாதுகாப்பு) விதிகள் இயற்றியது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 11-10-2002-ஆம் நாளிட்ட 140 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

88. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

89. 2001-2002 ஆம் ஆண்டிற்கான திருவள்ளூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).